**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 115/2013</u>**

இந்நீதிமன்றத்து தட்டச்சர் திருமதி. உமா மகேஸ்வரி அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025–ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26–ஆம் நாளில்** பதிவு செய்யப்பட்டது.

**தேதி – 26.06.2025**

**பெயர் – வாசு (எ) வாசுதேவன்**

**த/பெ – வேனுகோபால்**

**சாட்சி – DW1**

**விசாரணை தொடங்கும் நேரம்– 2.35. பி.எம்**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் இந்த வழக்கில் முதலாம் பிரதிவாதியாவேன். காலம்சென்ற வேனுகோபால்ரெட்டி எனது தந்தை என்றால் ஆம். மூன்றாம் பிரதிவாதி ேஹமச்சந்திரரெட்டி எனது பெரியப்பா என்றால் சரிதான். பிரதிவாதிகள் 4 முதல் 6 வரை எனது உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். நான் என்ன வேலை செய்கிறனே் என்றால லட்சுமி மெடிக்கல்ஸ் வைத்து வருகிறேன். நான் மருத்துவம் சம்பந்தமாக ஏதேனும் படித்துள்ளேனா என்றால் இல்லை. மெடிக்கல்ஸ் வைக்க அது சம்பந்தமாக படித்திருக்க வேண்டும் என்றால் இல்லை.

2. மெடிக்கல்ஸ் எங்கு உள்ளது என்றால் மணலி புதுநகரில், சென்னையில் உள்ளது. எனது பூர்வீகம் சுப்பாரெட்டிப்பாளையம் ஆகும். நான் சுப்பாரெட்டி பாளையத்தில் தான் தங்கி உள்ளேனா என்றால் இல்லை. 2011ம் ஆண்டிலிருந்து மணலிப்புதுநகரில் தங்கி வருகிறேன். இந்த வழக்கு சொத்து எதுவும் எனது பெயரில் இல்லை என்றால் இல்லை. எனது எதிர் வழக்குரைக்கு தெரிவித்த மறுப்புரைக்கு நான் பதில் எதுவும் கொடுக்கவில்லை என்றால் தெரியவில்லை. 2ம் 3ம் பிரதிவாதிகளின் பெயரில் தான் தாவா சொத்து ஆதிகாலத்தில் இருந்தது என்றால் சரிதான். 1984ல் ராக்கம்மாள் மற்றும் சந்திராபாய் என்பவர்களுக்கு தாவா சொத்தினை கிரையம் செய்தார்கள் என்றால் சரிதான்.

3. எனது பிரமான வாக்குமூலத்தில் 5ம் பத்தியில் 2ம் மற்றும் 3ம் பிரதிவாதிகளுக்கு 11 ஏக்கர் 7 செண்ட் சொந்தம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் 1984க்கு முன்பு எனது தந்தை மற்றும் பெரியப்பா பெயரில் இருந்தது. ராக்கம்மாள் மற்றும் சந்திராபாய் இருவரும் கிரையம் பெற்ற சொத்தில் வீட்டு மனை பிரிவு போட்டுள்ளார்கள் என்றால் 11 ஏக்கர் 7 செண்ட்ல் 5 ஏக்கர் 17 செண்ட் ராக்கம்மாளுக்கு 5 ஆவணங்கள் மூலம் மற்றும் சந்திராபாய்க்கு 2 ஆவணங்கள் மூலம் கிரையம் செய்யப்பட்டது.

4. மேற்படி கிரைய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த ஆவணங்கள் என்னிடம் இல்லை. 11 ஏக்கர் 7 செண்ட்டில் மொத்தம் 194 வீட்டு மனைகள் பிரித்துள்ளனர் என்றால் இல்லை. எனது பிரமான வாக்குமூலத்தில் 6ம் பத்தியில் 29.02.1994 அந்த தேதியில் கிரைய ஆவணம் எழுதப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை அது தவறு. எழுத்துப்பிழையில் 1984, 1994 என அச்சிடப்பட்டுள்ளது. **(சர்வே எண் 320 தொடர்பான வில்லங்க சான்று வா.சா.ஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** ஆவண எண் 524/1984 அதில் 2 மற்றும் 3–ம் பிரதிவாதிகள் ராக்கம்மாள் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். **(29/03/1984 தேதியிட்ட கிரைய ஆவணம் வா.சா.ஆ 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அந்த வில்லங்க சான்றில் சர்வே எண் 320/1, 320/2 என்று குறிப்பிட்டுள்ளது என்றும் அது தாவா சொத்திற்கு சம்பந்தப்பட்ட சர்வே எண் என்று கூறினால் சரிதான். மேற்குறிப்பிட்ட வில்லங்க சான்றில் குறிப்பிட்டுள்ள ஆவண எண் 524/1984 என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

5. எனது பிரமான வாக்குமூலத்தில் 6ம் பத்தியில் பல தேதிகளை குறிப்பிட்டுள்ளேன் என்றும் அதில் ஆவண எண்களும் யாருக்கு, யார் கொடுத்தது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆவண எண்களை நான் குறிப்பிட்டு இருந்தால் 2 மற்றம் 3ம் பிரதிவாதிகள் விற்பனை செய்த சொத்தில் நான் சட்ட விரோதமாக உள்நுழைந்த விவரம் தெரியவந்துவிடும் என்பதனால் நா்ன தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ராக்கம்மாள மற்றும் சந்திராபாய் சொத்தினை வீட்டுமனைகளாக பிரித்து விற்பனை செய்த விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 2004ம் ஆண்டுதான் தெரியும். 20 வருடம் கழித்துதான் எனக்கு தெரிய வந்தது என்றால் சரிதான்.

6. இது குறித்து வாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனும் அனப்பி உள்ளேனா என்றால் இல்லை. எனது பிரமான வாக்குமூலத்தில் 7ம் பத்தியில் 5 ஏக்கர் 17 செண்ட் மட்டும் தான் ஸ்ரீனிவாசன் நகர் என்ற பெயரில் வீட்டு மனைகள் போட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது என்றால் நீதிமன்றத்தில வழக்கறிஞர் ஆணையர் நியமித்து 5 ஏக்கர் 17 செண்ட் மட்டும் வைத்துக்கொண்டு 6 ஏக்கர் எங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. நீதிமன்ற ஆணைர் குறித்த ஆவணத்தை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது தரப்பில் தாக்கல் செய்த ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளேன்.

7. மேற்படி நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் வாதிகளின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சங்கத்தின் வாயிலாக தாக்கல் செய்ததால் வாதிகளின் பெயர் குறிப்பிடப்படவில்லை. (பி.சா.ஆ 2 சாட்சிக்கு காண்பிக்கப்பட்டது) நாராயணன், ரட்சகதாஸ் என்ற முகவரின் மூலமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர்கள் சங்கத்தின் தலைவர்கள். ரட்சகதாஸ் என்பவர் 2ம் பிரதிவாதி வேனுகோபால்ரெட்டி மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 256/2005 என்ற வழக்கில் 2ம் பிரதிவாதியை தவிர வேறு எந்த பிரதிவாதியின் பெயரும் வாதியின் பெயரும் அந்த ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான்.

8. மேற்சொன்ன அசல் வழக்கில் ரட்சகதாஸ் அவரின் சொந்தமான பிளாட் எண் 125/5, 134/4 என்ற இரண்டு பிளாடுகளுக்குத்தான் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த பிரமான வாக்குமூலத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியாது என்றும் நான் இவ்வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று கூறினால் இல்லை. அசல் வழக்கு எண் 256/2005 தடை உத்தரவுகோரிதான் தொடுத்த வழக்கு என்றால் தெரியவில்லை. பத்தி 9ல் குறிப்பிட்டுள்ள ஆவணம் குறித்து எனக்கு தெரியாத காரணத்தினால் நான் பொய்சாட்சயிம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

9. நான் மேற்சொன்ன வழக்கில் விளம்புகை பரிகாரம் கேட்காமல் தடை உத்தரவு கோரியுள்ளேன் என்றால் தெரியவில்லை. பத்தி 9ல் குறிப்பிட்டுள்ளது போல் சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றும் அது தொடர்பான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்று கூறினால் சரியல்ல. (சாட்சியிடம்

பி.சா.ஆ1 காண்பிக்கப்பட்டது) நான் மக்கள் நீதிமன்றத்தின் முன்பு சமாதனாமாக சென்றதாதாக கூறியுள்ள் இந்த ஆவணத்தில் வீட்டு மனை எண்கள் மற்றும் சொத்துக்களின் விவரம் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் ரட்சகதாஸ் மற்றும் 2ம் பிரதிவாதி திரும்ப பெற்றதில் சொத்து விவரம் மற்றும் பிளாட் எண்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

10. இந்த வழக்கை திரும்ப பெற்றதற்கு ஈடு தொகையாக ஏதேனும் கொடுத்தாரா என்றால் இல்லை. ரட்சகதாஸ்–ஐ இந்த வழக்கை தாக்கல் செய்த பின்பு தான் தெரியும். இந்த வழக்கிற்காக மட்டும் தான் நானும் அவரும் பழக்கம். (சாட்சியிடம் பி.சா.ஆ 2 காண்பிக்கப்பட்டது) 2ம் பிரதிவாயும் 3ம் பிரதிவாதியும் அசல் வழக்கு எண் 103/2006 தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கில் பிரதிவாதியின் பெயர் ஸ்ரீநிவாச நகர் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் குறிப்பிட்டுள்ளது மற்றும் அதில் 1ம் பிரதிவாதியின் பெயர் பிரசிடன்ட் ஜார்ஜ் என்று உள்ளது. சங்கத்தின் பதிவு எண்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் இல்லை. அதில் 2ம் பிரதிவாதியின் பெயர் ரட்சகதாஸ் என்று உள்ளது என்றால் சரிதான். வாதிகள் மற்றும் ஸ்ரீநிவாச நல சங்கத்தில் உள்ள வேறு யார் பெயரும் இடம் பெறவில்லை என்றால் சரிதான்.

11. ஸ்ரீநிவாச நல சங்கத்தின் பெயரில் வீட்டு மனைகள் எதுவும் இல்லை என்றால் இல்லை. ஸ்ரீநிவாச நல சங்கத்தின் பெயரில் வீட்டு மனைகள் இல்லாததால் நானே ஒரு நபரை உருவாக்கி வழக்கை தொடுத்துள்ளேன் என்றால் இல்லை. ஒரு நல சங்கம் என்பது அங்கு குடியிருக்கும் மக்களின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். ஒரு நல சங்கம் 3ம் நபரின் பெயரில் உள்ள சொத்துக்களை வேறு ஒரு நபருக்கு மாற்றி கொடுக்க இயலாது என்றால் சரிதான். அதனால் பி.சா.ஆ 2 வாதிகளை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அந்த வழக்கு தடை உத்தரவு கோரிதான் போடப்பட்ட வழக்கு என்றால் தெரியாது. எனக்கு தெரியாத ஒரு ஆவணத்தை நீதிமன்றத்தில் பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

12. அந்த ஆவணத்தில் 2ம் பிரதிவாதியின் ஒப்புதல் கொடுத்துள்ளதில் கிரைய ஆவண எண் எதுவும் குறிப்பிடபடவில்லை என்றும் அது அசல் வழக்கு எண் 256/2005 என்ற வழக்கில் கிரைய ஆவண எண் என்று கூறினால் தெரியவில்லை. அசல் வழக்கு எண் 256/2005 மற்றும் 103/2006 இரண்டு வழக்கிலும் ரட்சகதாஸ்

மற்றும் 2ம் மற்றும் 3ம் பிரதிவாதிகள் அவர்களுக்குள்ளேயே ரட்சகதாஸக்கு சம்பந்தமாக சொத்துக்களை குறித்து சமரசமாக தீர்த்து கொண்டனர் என்றால் தெரியாது.

13. எனது பிரமான வாக்குமூலத்தில் பத்தி 8ல் பட்டா பிரிக்க சொல்லி மனு கொடுத்துள்ளதாக கூறியுள்ளதில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதனா். அவ்வாறு மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு கொடுக்கப்பட்டு இருந்தால் அவ்வாணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பத்தி 10ல் இடைக்கால மனு எண் 369/2005 அசல் வழக்கு எண் 256/2005 குறிப்பிட்டுள்ளேன், ஆணையர் மனு என்று குறிப்பிட்டுள்ளேன் அந்த மனுவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த மனுவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாத காரணத்தினால் வாதிகளுக்கு விவரம் தெரியாது என்றால் தெரியவில்லை.

14. பத்தி 11ல் நீதிப்பேராணை மனு எண் 27061/2013 குறிப்பிட்டுள்ளேன் என்றும் அதில் வருடம் தவறுதலாக உள்ளது என்றும் அது 2012 ஆம் ஆண்டு என்று கூறினால் தெரியவில்லை. அந்த நீதிப்பேராணை மனு இந்த தாவா சொத்திற்கு தொடர்புடையதா என்றால் தெரியவில்லை. மனுவின் விவரம் எனக்கு தெரியாத காரணத்தினால் பத்தி 11ஐ பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 16.09.2012 அன்று நானும், மாதவரம் தொகுதி எம்.எல்.எ மகன் கண்ணதாசன் சேர்ந்து அங்குள்ள மக்களை சட்ட விரோதமாக அடித்து வெளியேற்ற முயற்சி செய்தோம் என்றால் இல்லை தவறு.

15. நீதிப்பேராணை மனுவானது பட்டாட இல்லாத நபர்களுக்கு பட்டா கிடைக்க கோரி தாக்கல் செய்த மனு என்றால் தெரியாது. அந்த நீதிப்பேராணை மனுவில் பட்டா வழங்க கோரி உத்தரவாகியுள்ளது என்றால் தெரியாது. பத்தி 12ல் அசல் வழக்கு எண் 256/2005 மற்றும் 103/2006 ல் வாதிகள் சரியான உரிமையாளர்களிடமிருந்து கிரையம் பெறவில்லை என்று கூறினால் சரிதான். வா.சா.ஆ 13ல் கூறியுள்ள ஆவண எண் 140/1985 அந்த ஆவணத்தின் மூலம் ராக்கம்மாள், கோலகிருஷ்ணன் என்பவருக்கு விற்பனை செய்தார் என்றால் தெரியாது. இந்த வழக்கு சொத்தில் 1984 லிருந்து வாதிகள் கிரையம் வாங்கிய சொத்தில் வாதிகளுக்கு 1984 லிருந்தே உரிமை வந்தது என்றால் தெரியாது.

ஆவண எண் 487/2006 ல் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளுக்கு கிரையம் ஏற்படுத்திக்கொண்டது என்றால் சரியல்ல. அதில் கிழக்கு புறமாக 30 அடி ரோடு உள்ளது என்றால் சரியல்ல.

**( மேலும் குறுக்கு விசாரணை செய்ய வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**
**விசாரணை முடியும் நேரம். 4.00 பி.எம்.**